[2015 செப்டம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 290, 291, 292 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

293—

தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை

***51758—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதியில் தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியங்களைத் தந்து உதவி புரியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.*

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி உலகளாவிய புகழ் பெற்ற தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எறும்பிற்கும் உணவு அளிக்கும் சக்தியின் வடிவமே! சங்கநாதம் எழுப்பும் திராவிடத்தின் திருவிளக்கே! கடைக்கோடி தொண்டனையும் (மேசையைத் தட்டும் ஒலி) கரையேற்றும்*

2015 செப்டம்பர் 18]

அற்புதமே! அடித்தட்டு மக்களுக்கும் ஏற்றம் தரும் ஏந்தலே! மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சேலம் மற்றும் தருமபுரி மாவட்ட மக்கள் அதிகளவிலே பயிர் செய்கின்ற மானாவாரி தக்காளி பயிர், மழை இல்லையென்றால், வறட்சியிலே காய்ந்து சேதம் அடைகிறது. அதிக மழை பெய்தால், அதன் பலனாக நல்ல விளைச்சல் கிடைக்கிறது. ஆனால், ஒரு கூடை பழம் ரூ.2/-, ரூ.3/-க்கு விற்கப்படுகிறது. அதனாலே விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, விவசாயிகளின் நலன் கருதி, பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு ஏதாவது உதவித் தொகை வழங்க பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஓமலூர் தொகுதியிலே தக்காளியைச் சேமித்து வைக்க ஒரு குளிர்சாதனக் கிடங்கு கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டு, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகப்படியாக மேச்சேரி, வாழப்பாடி, தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் ஆத்தூர் ஆகிய வட்டாரங்களில் 3,800 ஹெக்டேர் நிலப்பரப்பில் தக்காளி பயிரிடப்பட்டு, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு விளைவிக்கப்படுகிறது. ஓமலூர் தொகுதியைப் பொறுத்தமட்டில், ஓமலூர் பகுதியிலே 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 6 ஆயிரம் மெட்ரிக் டன் அளவில் தக்காளி விளைச்சல் ஆகிறது. சேலம் மாவட்டத்தில் விளையும் மொத்த தக்காளியும் பெரும்பாலும் வீட்டு உபயோகத்திற்கே பயன்படுத்தப்படுகிறது. இங்கு அதிக அளவில் விளையும் தக்காளிப் பழங்கள், சேலம் மற்றும் தாரமங்கலத்திலுள்ள தினசரி சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டு, மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகின்றன. அதிக விளைச்சல் இருக்கும் காலங்களில், தேவையான பிற மாவட்டங்களுக்கும், பெங்களூரு மற்றும் கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கும் வியாபாரிகளால் மொத்தமாக அனுப்பப்படுகிறது. ஒரு தக்காளி தொழிற்சாலை துவங்க வேண்டுமென்று சொன்னால், நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 660 கிலோ தக்காளி தேவைப்படுகிறது. மேலும்,

ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு ரூ.33 இலட்சம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கிணங்க, ஓமலூர் பகுதியில் தொழில்முனைவோர்கள் யாரேனும் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியங்களைத் தரும். அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

294—

அங்கன்வாடிக் கட்டடத்தைச் சீரமைத்தல்

***61968—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 12-வது வார்டு, சன்னதி தெருவிலுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 12-வது வார்டு சன்னதி தெருவிலுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், குழந்தைகளின் பாதுகாப்பு கருதி, அருகில் உள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குப் பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர், சேலம், அவர்களின்மூலம் நிருவாக அனுமதி பெற்று, புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அந்தக் கட்டடத்தைச் சீரமைப்பதற்கு தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.